**அம்பகமுவ பிரதேச சபை**
**நுவரெலியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 மே 21 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 18 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பகமுவ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மஸ்கெலியா உப அலுவலகத்தின் வாகனங்களுக்கு எரிபொருள் வழங்குவதற்காக மஸ்கெலியா கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 125,000 ஆன முற்பணத்தை மஸ்கெலியா பிரதேச சபைக்கு கையளிக்காமல் சபையின் முற்கொடுப்பனவு மற்றும் முற்பணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | முற்பணத்தை கையளிப்பதற்கு அல்லது மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2020 ஆம் ஆண்ன போது சீராக்க நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு | இணக்கமின்மை களை | கருத்து தெரிவிக்கவில்லை. |

| | |
|---|---|
| தயாரிக்கப்பட்டிருந்த நிதி நிலைமைக் கூற்றில் காணப்படும் 02 கணக்கு மீதிகளின் பெறுமதி மற்றும் அக்கணக்கு மீதிகளுக்குரிய பயன்பாட்டிற்குரிய பதிவேடுகளுக்கு இடையே ரூபா 11,908,150 ஆன வேறுபாடு காணப்பட்டது. | இணங்கண்டு சீராக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் நிர்மாணக் கடன்பட்டோர் மீதி ரூபா 65,871,368 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 26,050,468 ஒரு வருட காலத்தை விஞ்சியிருந்தது. | நிலுவை மீதிகளை அறவிடுதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் மீதிகளின் மொத்தம் ரூபா 92,685,808 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 55,263,978 ஒரு ஆண்டிற்கு மேற்பட்டிருந்தது. | கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

**(இ) கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்காக கிடைக்க வேண்டிய 65 சந்தர்ப்பங்களுக்குரிய நிர்மாண வேலை மாணியத்தொகை ரூபா 13,536,207 தொடர்பான | அறவிடுவதற்கு அல்லது கணக்குகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் | | | |
| | (i) நி.பி 571(2) | 25 சந்தர்ப்பங்களில் வைப்பிலிடப்பட்டு 02 வருடங்களைத் தாண்டியிருந்த ரூபா. 302,508 பெறுமதியான வைப்புகள் தீர்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணங்களின் அடிப்படையில் செயற்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| | (ii) நி.பி 189 | 1988 முதல் 2007 வரையிலான காலப்பகுதியினுள் 21 சந்தர்ப்பங்களில் ரூபா. 118,659 பெறுமதியான காசோலைகள் தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ஆ) | பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) பிரமாணம் 218 | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான கணிப்பீடொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (இ) | 1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளூராட்சி | வீதிவரி அறவீட்டுக்காக ஆதனங்கள் 05 ஆண்டுகளுக்கு ஒரு | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை | பல சந்தர்ப்பங்களில் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் |

| | | | |
|---|---|---|---|
| மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | முறை மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | எடுக்கப்பட வேண்டும் | வேண்டுகோள் விடுக்கப்பட்டது. 202 ஆகஸ்ட் மாதத்தின் போது மேற்கொள்வதாக அறவிக்கப்பட்டிருந்தது. |

**1.5 வரித் தேவைகளுடன் இணங்காமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண வரிச் சட்டம் | முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் அறவிடப்பட்ட முத்திரை வரியின் கூட்டுத்தொகை ரூபா. 2,254,962 தொகையை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வில்லை. | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ஆ) | 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டம் | முன்னைய வருடத்தினுள் சேகரிக்கப்பட்ட ரூபா. 738,143 தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி தேசிய உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்தப்பட்டிருக்க வில்லை. | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,355,920 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,026,854 ஆக இருந்தது

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 5,126,400 | 2,927,733 | 3,588,220 | 1,961,779 | மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | 2,070,677 | 1,573,804 | 1,761,446 |
| வாடகை | 15,020,000 | 1,747,100 | 1,617,631 | 1,384,345 | | 2,387,650 | 2,504,792 | 2,339,603 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 10,701,000 | 1,996,798 | 1,996,798 | 182,421 | | 1,242,900 | 1,242,900 | 182,420 |
| ஏனைய வருமானம் | 79,805,000 | - | | - | | 7,228,663 | 7,539,978 | 15,595,406 |
| மொத்தம் | 110,652,400 | 6,671,631 | 7,202,649 | 3,528,545 | | 12,929,890 | 12,861,474 | 19,878,875 |

### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயற்றிறன்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கினிகத்ஹேன வலயத்தின் 13 ஆதனங்களிலிருந்தும் நோட்டன் பிரிட்ஜ் வலயத்தின் 11 ஆதனங்களிலிருந்தும் 10 ஆண்டுகள் முதல் முறையே அறவிடப்பட வேண்டியிருந்தது. | குறித்த தொகைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ii) | 2008 மற்றும் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய நிலுவை கேள்வி கட்டணங்கள் ரூபா 1,002,644 அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவை கேள்விக் கட்டணங்களை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

### 2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா. 2,052,283 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா. 20,000,000 அறவிடப்பட்டிருக்கவில்லை. | பணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் தொடர்பான அறிவை பிரதேச சபை போதியளவு பெற்றிருக்காத அதேவேளை மீளாய்வாண்டினுள் அது தொடர்பாக திட்டவட்டமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை இனங்கண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை. |

### (ஆ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டில் ரூபா 88,700,000 நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த 07 மூலதனச் செயற்திட்டங் களுக்காக 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை செயற்படுத்துவுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ii) | 2018 ஆம் மாகாண சபை உறுப்பினர் நிதிஏற்பாட்டின் பேரில் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 729,014 ஆன பொருட்களை பகிர்ந்தளித்தல் செயற்திட்டங்களுக்காக நிதி மீளளிக்கப்பட்ட போதும் 2019 | செயற்திட்டத்தை செயற்படுத்துவுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 ஆந் திகதி வரை செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (iii) | கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரம்பாதெனிய 20 வீடுகளுக்கு ஊடாக கோனாவெல வீதி தாரிட்டு அபிவருத்தி செய்வதற்காக ரூபா 2,000,000 ஆன நிதிஏற்பாட்டுத் தொகை பிரதேச செயலகத்தினூடாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. சபையினால் உடன்படிக்கை செய்த கிராம அபிவிருத்தி சங்கம் குறித்த நிர்மாணத்தை தவிர்ப்புச் செய்தமை காரணமாக பிரதேசத்தின் அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்த ரூபா 2,000,000 நிதிஏற்பாடு இல்லாமல் போயிருந்தது. | எதிர்வரும் காலங்களில் இவ்வாறான குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 ஆம் ஆண்டு முதல் 2019 யூலை வரை வெவ்வேறு நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் செலுத்தப்பட்டிருந்த ரூபா. 1,547,006 முற்பணம் மீள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | முற்பணத்தை தீர்க்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

**3.3. ஊழியர் வெற்றிடங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 12 பதவிகளில் 17 வெற்றிடங்களை நிரப்புவுதற்கம் 02 பதவிகளில் 02 மிகை களையும் முறைப்படுத்துதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகையை முறைப்படுத்தவும் நடவடிக்கை வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை. |

**3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் நீர் வழங்கல் சேவை வழங்கல் மீண்டெழும் செலவினம் ரூபா 3,485,994 ஆக இருந்த போதும் வருமானம் ரூபா 926,051 ஆக இருந்தமையால் நீர் வழங்கல் நட்டம் ரூபா 2,559,943 ஆக இருந்தது | இயலுமான வரை கிரயத்தை மேவுகை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேணடும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ii) | ஸ்ரெடன்தோட்ட கிழக்கு பகுதிக்கு குடிநீர் வழங்கும் வேலைக்காக ஆண்டின் போது ரூபா 1,167,614 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் நீரின் தன்மை தொடர்பான அறிக்கை ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபையிடமிருந்து பின்னர் வழங்கிய தரப் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் நீரில் அடங்கியுள்ள பக்டீரியா சதவீதம் உயர் பெறுமதியொன்றை எடுத்துள்ளதாக கண்டறியப்பட்டிருந்தது. | நீர் சுத்திகரிப்பிற்கு தேவையான நடைமுறைகளை எடுப்பதற்கு செயற்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 வாகன முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குரிய 04 மோட்டார் வாகனங்கள் மற்றும் 02 மோட்டார் சைக்கிள்களும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப் பகுதியில் ஓட்டத்திலிருந்து அகற்றப் பட்டிருந்ததுடன் திருத்தி அமைத்து பயன்படுத்தவோ அல்லது கை தவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை. |

### 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

#### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 193 இன் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டிற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் செலவினத்திற்குமிடையே ஏற்பட்டிருந்த வேறுபாடுகள் தொடர்பான விடயங்களை விளக்கும் கூற்று சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதி மற்றும் நிர்வாக விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |